# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8069074

1. District மாவட்டம் : சென்னை — PS காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சென்னை நகரப்பிரிவு — Year ஆண்டு : 2024 — FIR No. மு.த.அ. எண் : 01 — Date நாள் : 14.03.2024

2. (i) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Prevention of corruption Act 1988 as amended in 2018 — Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை : 12.03.2024 at 4.30 PM 13.03.2024 at 11.00 AM
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 14.03.2024 — Time நேரம் : at 0900 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time நேரம் : on 14.03.2024 after registration of FIR

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்துமூலமான புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 08 KM தென்கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி : சென்னை வேளச்சேரி தரமணி இணைப்பு [illegible] அம்மா உணவகம் அருகே அமைந்துள்ள சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-13 வார்டு எண்-180 அலுவலகம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திருமதி M. தீபா — (b) ~~Father's~~/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : மகிகுமார்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 36/2024 — (d) Nationality : நாட்டினம் : இந்தியர் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் : — — Place of Issue : வழங்கப்பட்ட இடம் : —
(f) Occupation : தொழில் : இல்லத்தரசி — (g) Address : முகவரி : எண்.17, ராஜீவ் காந்தி தெரு எம்.ஜி.ஆர் நகர், தரமணி, சென்னை-113

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. சரவணன், Tax collector, சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம்-13 அலுவலகம் வார்டு எண். 180

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. [signature] 14/3/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Vallinayagam 14.03.2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14.3.2024 at 1130 hrs.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் (S. VALLINAYAGAM)
Rank: நிலை Inspector of Police No. எண் ....
CC-III V&AC Alandur
Chennai-600 016.

Sign [signature] 14/3/24
Seen [signature] 14/3/24.

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு-3 குற்ற எண்.01/2024 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் வரிசை எண்.12யின் தொடர்ச்சி பின்வருமாறு

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது : 14.03.2024ந்தேதி காலை 0900 மணியளவில், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-3யின் காவல் ஆய்வாளர் சு.வள்ளிநாயகம் ஆகிய நான், மேற்சொன்ன அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, சென்னை-600113, தரமணி, எம்.ஜி.நகர், ராஜீவ் காந்தி தெரு, எண்.17 என்ற முகவரியில் வசித்து வரும் திருமதி.M.தீபா, க/பெ.மகிகுமார் என்பவர் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் வந்து, சென்னை நகரப்பிரிவு-3 காவல் ஆய்வாளர் ஆகிய என்னிடம் தமிழில் தட்டச்சு செய்து கொடுத்த எழுத்து மூலமான புகாரை கொடுத்தார். நான் அந்த புகாரை பெற்று, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமைய உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் புகார் மனு தொடர்பாக மறைமுகமாக ரகசிய விசாரணை மேற்கொண்டேன். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-13 வார்டு-180 அலுவலர் திரு.சரவணன், Tax Collector மற்றும் புகார்தாரர் திருமதி.M.தீபா ஆகியோர்களின் முன்நடத்தையும், புகார்மனுவின் உண்மை தன்மையையும் ரகசிய விசாரணை மேற்கொண்டேன். எனது ரகசிய விசாரணையில் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டிற்கு மூகாந்திரம் இருப்பதால் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் அனுமதி பெறப்பட்டு, புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப ஊழல் தடுப்பு சட்டம் 1988 திருத்தப்பட்ட ஊழல் தடுப்பு திருத்தம் சட்டம் 2018யின்படி சட்டப்பிரிவு 7யின்படி இன்று 14.03.2024ந்தேதி காலை 1000 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர், M.தீபா, க/பெ.மகிகுமார்,எண்.17, ராஜீவ் காந்தி தெரு, எம்.ஜி.நகர், தரமணி, சென்னை-600 113. பெறுநர் உயர்திரு இன்ஸ்பெக்டர் அவர்கள், சென்னை நகரப்பிரிவு-3, லஞ்ச ஒழிப்புத்துறை, ஆலந்துார், சென்னை-*16*. அய்யா, நான் சென்னை, தரமணி, எம்.ஜி.நகர், ராஜீவ் காந்தி தெருவில் எண்.17 என்ற முகவரியில்

குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது தாயார் ராஜலட்சுமி அவர்களுக்கு சொந்தமான மேற்சொன்ன முகவரியில் பூர்வீக இடத்தில் உள்ள வீட்டில் எனது கணவர் மகிகுமார் மற்றும் குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். எனது கணவர் பயணிகள் ஆட்டோ ஒட்டும் தொழில் செய்து வருகிறார். எனது தந்தை விஸ்வநாதன் கடந்த 30 வருடங்களுக்கு முன்பே காலமாகிவிட்டார். எனக்கு ஷிலா என்ற தங்கை உள்ளார். எனது தங்கையின் கணவர் பெருமாள் காலமாகிவிட்டார். ஆதலால் எனது தாயார், தங்கை மற்றும் எனது குடும்பமும் கூட்டு குடும்பமாக மேற்சொன்ன முகவரியில் வசித்து வருகிறோம். எனது தாயார் ராஜலட்சுமி பெயரில் நாங்கள் அனைவரும் வசித்து வரும் வீட்டிற்கு சொத்து வரியாக அரையாண்டு காலத்திற்கு ரூ.50/-செலுத்தியுள்ளேன். ஏப்ரல் 2018 முதல் செப்டம்பர் 2018 வரையிலான காலத்திற்கு ரூ.115/-யும், அக்டோபர் 2018 முதல் மார்ச் 2019 வரையிலான காலத்திற்கு ரூ.115/-யும், ஏப்ரல் 2019 முதல் செப்டம்பர் 2019 வரையிலான காலத்திற்கு ரூ.115/-யும் வீட்டிற்கான சொத்து வரி செலுத்தியுள்ளேன். (வரி செலுத்து சீட்டு எண்.06619 ஆகும்) மற்றும் தண்ணீர் வரியும் வருடத்திற்கு செலுத்தி வருகிறேன். மேலும் நாங்கள் வசித்து வீட்டிற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் இணைப்பும் (மின் இணைப்பு எண்.275/017/1503) பெற்றுள்ளோம். நாங்கள் வசித்து வந்த வீடு ஓட்டு வீடாகும். நாங்கள் வசித்து வரும் மேற்சொன்ன ஓட்டு வீட்டை, கடந்த ஜனவரி 2024ல் தளம் போட்ட வீடாக புதுப்பித்து கட்டி முடித்தோம். இந்நிலையில் நான் எனது கணவருடன் கடந்த 18.01.2024ந்தேதி சென்னை வேளச்சேரி தரமணி இணைப்பு சாலையில் அம்மா உணவகம் அருகே உள்ள பெருநகர மாநகராட்சி மண்டலம்-13 வார்டு எண்.180 அலுவலகத்திற்கு சென்று அந்த அலுவலகத்தில் பணியில் இருந்த ஒரு நபரை அணுகி, தற்போது வசித்து வரும் ஓட்டு வீட்டை தளம் போட்ட வீடாக மாற்றம் செய்து கொண்டிருப்பதாகவும் தளம் போட்ட வீட்டிற்கு சொத்து வரி தொடர்பாக கேட்டபோது அந்த நபர் தளம் போட்ட வீடு முழுவதும் கட்டி முடிந்ததும் தகவல் தெரிவிக்கும்படியும், மேலும் அவர் பழைய ஓட்டு வீட்டிற்கான சொத்து வரியாக பணம் ரூ.200/- தற்போது செலுத்தும்படி கூறியதால் நானும் அன்றைய தினமே சொத்து

வரியாக பணம் ரூ.200/- செலுத்தினேன். அதற்கான Tax Receipt அந்த நபர் கையொப்பம் செய்து என்னிடம் வழங்கினார். அந்த Tax Receipt No.2023-24/N180/136737 மற்றும் அவரது பெயர் சரவணன், என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்நிலையில் தளம் போட்ட வீடு முழுவதும் கட்டுமானம் முடிவுற்றதால், கடந்த 12.03.2024ந்தேதி மீண்டும் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-13 வார்டு எண்.180 அலுவலகத்திற்கு மாலை சுமார் 4 மணியளவில் சென்று நாங்கள் வசித்து வரும் வீட்டிற்கான சொத்து வரி தொடர்பாக ஏற்கனவே பேசிய நபர் திரு.சரவணன் என்பவரை அணுகி தளம் போட்ட வீடாக முழுவதும் கட்டுமானம் முடிவுற்றதாக தெரிவித்தேன். அவரும் தனது அலுவலக கணிணி மூலம் சரிபார்த்துவிட்டு பழைய ஓட்டு வீட்டிற்கு சொத்து வரி செலுத்த வேண்டியது பாக்கி உள்ளதாக தெரிவித்தார். நானும் பணம் ரூ.100/- செலுத்தியதும், அதற்கான Tax Receiptல் திரு.சரவணன் அவர்கள் கையொப்பம் செய்து என்னிடம் வழங்கினார். அந்த Tax Receipt No.2023-24/N180/1634053 ஆகும். பின்னர் திரு.சரவணன் அவர்கள் அன்றைய தினம் (12.03.2024) மாலை சுமார் 4.30 மணியளவில் நாங்கள் புதுப்பித்து கட்டியுள்ள தளம் போட்ட வீட்டை நேரிடையாக வந்து வீட்டின் அளவுகளை அளவீடு செய்து குறித்து கொண்டார்கள். பின்னர் திரு.சரவணன் அவர்கள் அவரது அலுவகத்திற்கு வரசொன்னதால் அன்றைய தினம் மாலை 5 மணியளவில் நானும் எனது கணவரும் அவரை அவரது அலுவலக அறையில் நேரில் சந்தித்தோம். அப்போது திரு.சரவணன் அவர்கள் புதுப்பித்து கட்டியுள்ள தளம் போட்ட வீட்டை ஆய்வு செய்து விட்டதாகவும் அதற்கான புதிய சொத்து வரி குறைவாக நிர்ணயம் செய்வதற்கு தனக்கு தனியாக பணம் ரூ.20,000/- கொடுக்கவேண்டும் என்றும், அவ்வாறு தனக்கு பணம் தராவிட்டால் சொத்து வரியை அதிகமாக நிர்ணயம் செய்துவிடுவேன் என்று கூறினார். நான் என்னால் அவ்வளவு தொகையை தரமுடியாது என்று கூறினேன். தனக்கு தனியாக லஞ்சமாக பணம் ரூ.20000/- தராவிட்டால் புதுப்பித்து கட்டியுள்ள தளம் போட்ட வீட்டிற்கான சொத்து வரியை அதிகமாக நிர்ணயம் செய்துவிடுவதாக கூறினார். மேலும் நான் அவரிடம் அவ்வளவு பணம் என்னால் தரமுடியாது என்று கூறியதால், அவர்

தனக்கு தனியாக முதல் தவணையாக பணம் ரூ.10,000/-மும் கொடுக்கும்படியும், மீதித்தொகையான ரூ.10,000/- நாங்கள் வசித்து வரும் தளம் போட்ட வீட்டிற்கு சொத்துவரியை குறைத்து நிர்ணயம் செய்ததும், கொடுக்கும்படி கூறினார். நான் எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் மீண்டும் 13.03.2024ந்தேதி காலை சுமார் 11 மணியளவில் நான் எனது கணவருடன் திரு.சரவணன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து வீட்டிற்கான சொத்து வரி நிர்ணயம் செய்வது தொடர்பாக பேசிய போது, திரு.சரவணன் அவர்கள் தான் ஏற்கனவே கூறியபடி தனக்கு தனியாக முதலில் பணம் ரூ.10000/- கொடுத்தால்தான் சொத்து வரியை குறைத்து நிர்ணயம் செய்வேன் என்று கறாராக தெரிவித்துவிட்டார். நானும் எனது கணவரும் எனது தாயாரிடம் புதுப்பித்து கட்டியுள்ள தளம் போட்ட நமது வீட்டிற்கு சொத்து வரி நிர்ணயம் செய்வதற்கு சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலகத்தில் மண்டலம்-13 வார்டு எண்.180 பணிபுரியும் திரு.சரவணன் லஞ்சமாக பணம் ரூ.20,000/- கேட்பதை தெரிவித்தேன். எனது தாயாருக்கு திரு.சரவணன் லஞ்சமாக கேட்ட பணத்தை கொடுக்க விருப்பமில்லை. எனக்கும் திரு.சரவணன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பமில்லை. நான் எனக்கு தெரிந்தவர்களிடம் விசாரித்ததில் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் செய்யலாம் என்று கூறினார்கள். எனக்கு அத்தியாவசியப்பணிகள் இருந்ததால் அவற்றை முடித்து விட்டு இன்று 14.03.2024ந்தேதி காலை 9 மணிக்கு இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். நான் எனது கணவர் மற்றும் குழந்தைகள் மற்றும் எனது தாயார், சகோதரியுடன் வசித்து வரும் மேற்சொன்ன முகவரியில் உள்ள புதுப்பித்து கட்டியுள்ள தளம் போட்ட வீட்டிற்கு சொத்து வரி நிர்ணயம் செய்வதற்கு லஞ்சமாக கேட்ட சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலகத்தில் மண்டலம்-13 வார்டு எண்.180 பணிபுரியும் திரு.சரவணன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு கொள்கிறேன். இந்த புகார் மனுவுடன் Greater Chennai Corporation/Revenue Department Property Tax Demand Cardயின் நகலையும் மற்றும் பழைய ஓட்டு வீட்டிற்கு 18.01.2024 மற்றும் 12.03.2024 ஆகிய

தேதிகளில் சொத்து வரி செலுத்தியதற்கான ரசீதுகளையும் இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd/- xx M.தீபா 14.3.2024

Sir, I received the above complaint on 14.03.2024 at 0900 hrs.at my office and had discreet verification over the antecedents of the accused and bonafide of the complainant and after getting concurrence from the higher officials, I registered an FIR in Vigilance and Anti-Corruption Chennai City-III Cr.No.01/2024/AC/CC-III u/s 7 of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on this day 14.03.2024 at 10.00 hrs and taken up for investigation. Sd/- (S.VALLINAYAGAM), INSPR OF POLICE,V&AC,CC-III, Chennai-16.

S. Vallinayagam 14/03/2024
(S.VALLINAYAGAM)

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Chennai City-III
Alandur, Chennai-600 016